Chapter XXIII Code of Criminal Procedure.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, TIRUNELVELI

CC 2422/2022

Deposition of witness: PW 1

| | | | |
|---|---|---|---|
| Name : | Esakkipandi | Caste : | |
| Father's/ Husband's Name : | Theeramamuthu | Calling : | |
| Village : | | Religion : | |
| Taluk : | | Age : | 32 |

**Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) in the day of 24.07.2023.**

**(Accused present.)**

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் வேலை செய்யும் போது அடிப்பட்டு மருத்துவமனைக்கு சென்றிருந்த போது அங்க வந்த போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியானதால் சாட்சியை கு.வி விசாரணை செய்ய அனுமதிக்க கோரி அனுமதிக்கப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

தற்சமயம் எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்று சொன்னால் சரிதான். இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். போலீஸ் விசாரணையின்போது 06.07.2022ம் தேதி 08.00 மணியளவில் நான் எனது வீட்டு முன்பு நின்று பேசிக் கொண்டிருந்த போது அங்கு வந்த எதிரி என்னை பார்த்து பொது இடத்தில் வைத்து தகாத வார்த்தைகள் பேசி மன உளைச்சளையும் அவமானத்தையும் ஏற்படுத்தி கையால் எதிரி என்னை அடித்து காயம் ஏற்படுத்தி என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று குற்றமுறு கொலை மிரட்டல் செய்த வழக்கு சம்பவத்திற்கு சிவந்திப்பட்டி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாக கூறிவிட்டு தற்சமயம் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் அவர் மீது மேல் நடவடிக்கை எடுக்க தேவையில்லை என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் என்றால் சரியல்ல.